**குறிப்புகள்:**

- www.lyrikline.org பாட்டுவரித் தளத்தைக் கருத்தில் எடுத்தல்: இவ் இணையத்தளம் உண்மையிலேயே ஒரு புதையலாகும். இது 60ற்கு மேற்பட்ட மொழிகளில் கவிதைகளைக் கொண்டுள்ளது. அவை படைப்பாளிகளாலேயே உரக்க வாசிக்கப்படும். அத்துடன் அவர்களைப்பற்றிய சுய விவரத் தகவல்களை வழங்குகின்றது. அடிக்கடி ஜேர்மன்மொழியில் மொழிபெயர்ப்புண்டு அல்லது இணையத்தளத்தால் ஏற்கக்கூடிய அல்லது ஏனைய மொழிகளுக்கும் மொழி பெயர்ப்பு உண்டு. இணையத்தளத்தைக் கையாளுதல்: தளத்தில் செல்லுதற்கு மொழியைத் தேர்ந்தெடுக்கவும் பின்னர் விரும்பிய கவிதை மொழியை தேர்வு செய்யவும் "search term" எனும் இடத்தில் கவிதைகளின் விருப்பு மொழியை உள்ளீடு செய்யவும்.

---

**மாற்று முறைகள்:**

பல தகுந்த விரிவாக்க நிலைகள் உள்ளன, அதாவது:

- எழுத்துருக்கள் (அடிக்கடி மொழிபெயர்ப்புடன்) அச்சிட முடியுமென்பதுடன் அவை பிரதிபண்ணப்படுகின்றன. இது மொழி ஒப்புமைகள் மற்றும் மொழி தொடர்பிலான கண்காணிப்புகளுக்கு வாய்ப்பிக்கின்றது.
- மாணவர்கள் தமக்கு விரும்பிய கவிதையைப் படித்துப் பயிற்சி செய்து அதைத் தாமாகவே வகுப்பில் ஓதிக் காட்டுவர்.
- மாணவர்கள் பிற மொழிகளில் கவிதைகளைச் கவிதையைச் செவிமடுப்பு-துடன், அழகான செவிமடுத்தல் பட்டறிவை தீர்மானிப்பர் மற்றும் / அல்லது தம்முடைய மொழியுடன் ஒப்பிட்டுப் பார்ப்பர் (ஒலி, பேச்சு, சந்தம், இன்னிசை, போக்கு மற்றும் பல).

---

# 29 நூலிலுள்ள கதை மாந்தர்கள்

**இலக்கு**

*ஓர் எழுத்துருவை படிக்கும்போது, மாணவர்கள் இன்றியமையாத கதைத்தலைவன் அல்லது பிறிதொரு ஆளின் உருவப் பிரதியை உருவாக்குவதுடன் இக்கதை மாந்தரின் பட்டறிவினை ஆழமாகப் பகுப்பாய்வு செய்வர். ஆழமான விளங்கிக் கொள்ளல் மற்றும் இனங்காணுதல், மாணவர்கள் கதைக்கரு மற்றும் கதை மாந்தர்களுக்கிடையிலான தொடர்புகளை விளங்கிக்கொள்வதற்கு இன்றியமையாததாயுள்ளது.*

5ம் - 9ம் தரம் | 90 மணித்துளிகள்

**கருவிகள்:**
வரலாற்று நூல், கதை நூல் அல்லது முழுமையான நூல் (படங்களை உள்ளடக்கிய ஒரு நூலும் கூட) தாள், வர்ணம் தீட்டும் பென்சில்கள்

**செயல்முறை:**

- ஒரு நூலைப் படிக்கும்போது அல்லது படித்த பின் (கதை நூல் அல்லது பட நூல்) மாணவர்கள் கதைத்தலைவன் அல்லது பல்வேறு இன்றியமையாத உருவங்களின் பிரதிமையை அல்லது தன் விவரத்தை உருவாக்குவார்கள். இதை ஒரு தனிப்பட்ட அல்லது இருவர் இணைந்து மேற்கொள்ளும் ஒப்படையாக நிறைவேற்ற முடியும். ஒப்படைக்கு முன் அவ்வாறான பிரதிமைக்கு அல்லது விபரத்திற்கான முக்கியமான கருத்துக்களைக் கலந்துரையாடுவர். எ.டு.,
  - அந் நபர் எங்கே வசிக்கின்றார்?
  - அந்நபரின் தோற்றம் எப்படியுள்ளது?
  - குறிப்பாக நன்றாகவிருக்க இந்நபரால் என்ன செய்ய முடியும்? என்ன செய்யக் கூடாது?
  - இந்நபரை எக் கவலை ஆட்கொண்டுள்ளது?
  - இந்நபரின் குடும்பம் பற்றி உமக்கு என்ன தெரியும்?
  - வேறு யார் இந்நபருக்கு இன்றியமையாதவர்கள்?
  - இந்நபரோடு நண்பராக இருக்க விரும்புகின்றீர்களா? ஆம் எனில் ஏன்? இல்லையெனில் ஏன்?

III

- எழுத்து மூலமான மறுமொழிகளுடன், பிரதிமை அந்நபரின் வடிவமைப்பினையும் உள்ளடக்க வேண்டும்.
- பிரதிமைகள் பின்னர் கலந்துரையாடப்பட்டு ஒப்பிடப்படும், முதலில் குழுக்களாக, பின்னர் வகுப்பு முழுவதும்.

**இந்நபர் என்ன எண்ணுகிறார்?**
(எண்ணங்கள் வரிகளுக்கிடையே பெரும்பாலும் காணப்படும்)



**இந்நபர் இக்கதையில் என்ன செய்கிறார்?**
(பெரும்பாலும் எழுத்துருவில் கூறப்பட்டுள்ளது)

**குறிப்புகள்:**

இக்கருத்திட்டம் 7-9 தர மாணவர்களுடன் நடத்தப்படலாம். உருவம், மொழி, செயற்பாடு ஆகியவற்றையொட்டி ஒப்படைகள் எளிமையானவையாக அல்லது பெரிதும் அறைகூவலுடையனவாக ஆகலாம்.